BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

# நகரின் உணவு பதப்படுத்தும் துறை தரவரிசையில் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக #1 தரநிலையில் ப்ராம்ப்ட்டன் இருக்கிறது

ப்ராம்ப்ட்டன், ON (ஜூலை 15, 2022) –நேற்றைய தினம், பிஸினஸ் ஃபெசிலிட்டீஸ் (Business Facilities Magazine) இதழின் 18வது வருடாந்திர மெட்ரோ தரவரிசைகளுக்கான அறிக்கையின்படி, உணவு பதப்படுத்துவதில் முன்னோடிகள் எனும் பிரிவில் முதல் இடத் தரவரிசையுடன் ப்ராம்ப்ட்டன் நகரம் முதலிடத்தைப் பெற்றது. இந்த தரவரிசை நிலைக்காக நகரம் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

2021 இலையுதிர்காலத்தில் உணவு பதப்படுத்தும் தொழிலுக்கான பணியாளர்களை அதிகரிக்கும் ஒரு முன்னோடி திட்டத்திற்காக ப்ராம்ப்ட்டன் சிறந்த அங்கீகாரத்தைப் பெற்றது. வேலைவாய்ப்புக்களை உண்டாக்குதல், விரிவாக்கங்கள் மற்றும் தொழில்துறைக்கான திட்டங்கள் ஆகியவையே தரவரிசைக்கு பங்களித்த பிற காரணிகளாகும். 2021 ஆண்டிற்கான முழு தரவரிசை அறிக்கையை www.businessfacilities.com. இல் காணலாம்.

வட அமெரிக்காவின் மிகப்பெரிய விவசாய உணவுத் துறைகளில் ஒன்றான ஒன்ட்டாரியோவின் உணவுக் குழுத் தொகுப்பின் ஒரு பகுதியாக, தொழில்துறையில் முன்னணி தொழில்நுட்பம், உயர்தர தயாரிப்புகள் மற்றும் வளமான விவசாய பாரம்பரியம் ஆகியவற்றால் ஆதரிக்கப்படும் ஒரு செழிப்பான உணவு மற்றும் பானத் துறையைக் ப்ராம்ப்ட்டன் கொண்டுள்ளது. ப்ராம்ப்ட்டனின் உணவு மற்றும் குளிர்பானத் துறையானது உணவுப் பரிசோதனை, பதப்படுத்துதல் மற்றும் பேக்கேஜிங் வசதிகள் மற்றும் போக்குவரத்து, பேக்கேஜிங் வடிவமைப்பு, உபகரணங்கள் மற்றும் குளிர்பதன சேமிப்பு ஆகிய அனைத்துமே நகரத்திற்குள்ளேயே முழுமை பெற்ற ஒரே இடத்தில் உள்ளன.

ப்ராம்ப்ட்டனின் உணவு மற்றும் பானத் துறைகள் ஆண்டுதோறும் கனடிய மொத்த உள்நாட்டு உற்பத்திக் குறியீட்டு(GDP) க்கு  $1.3 பில்லியன் பங்களிக்கின்றன. உணவு மற்றும் பானங்கள் உற்பத்தி, பதப்படுத்துதல் மற்றும் அதன் துணைத் தொழில்களின் வகையில் சுமார் 300 நிறுவனங்களில் 8,500 பேர் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.

ப்ராம்ப்ட்டனில் உள்ள உணவு மற்றும் பானங்கள் துறையில் முதன்மையான வேலைவாய்ப்பு வழங்குவோரில் லோப்லாஸ் (Loblaws), மேப்பிள் லாட்ஜ் மற்றும் இட்டல்பாஸ்தா (Italpasta) ஆகியவற்றின் தலைமையகங்கள் ப்ராம்ப்ட்டனில்தான் உள்ளன. கூடுதலாக, கோகா கோலா பாட்லிங் (Coca-Cola Bottling) மற்றும் கிவ் அண்ட் கோ ப்ரிபேர்டு ஃபுட்ஸ் (Give and Go Prepared Foods) போன்ற முக்கிய நிறுவனங்கள் ப்ராம்ப்ட்டனில் தங்கள் வசதியமைப்புக்களைக் கொண்டுள்ளனர். இந்த

நிறுவனங்கள் அனைத்தும், நகரின் திறமை, உள்கட்டமைப்பு மற்றும் சந்தை அணுகலைப் பயன்படுத்திக் கொள்வதற்காக, ப்ராம்ப்ட்டனுக்குள் தங்களை யுக்திரீதியாக நிலைநிறுத்திக் கொண்டுள்ளன.

சமீபத்தில், டாப்பிட்ஸ் ஃபுட் லிமிடெட் (Toppits Food Ltd) நிறுவனம், தனது உணவு உற்பத்தி திறன்களை விரிவுபடுத்துவதாகவும், அதன் புதிய ப்ராம்ப்ட்டன் வசதியில் புதிய கடல் உணவு பதப்படுத்துதல் மற்றும் உறையவைப்பதற்கான சாதனங்களை வாங்குதல் மற்றும் நிறுவுதல் ஆகியவற்றை அறிவித்தது. இது ப்ராம்ப்ட்டன் பிராந்தியத்தில் 60 புதிய வேலை வாய்ப்புக்களை உருவாக்கவும், உள்நாட்டு உற்பத்தி திறனை இரட்டிப்பாக்கவும் மற்றும் எதிர்கால வளர்ச்சிக்கு அடித்தளம் அமைக்கவும் உதவும்.

மேப்பிள் லீஃப் ஃபுட் (Maple Leaf Food) நிறுவனமும் கூட 2021 ஆம் ஆண்டில் ப்ராம்ப்ட்டன் சமூகத்தில் கணிசமான முதலீட்டைச் செய்துள்ளது; புதிய லைன் மற்றும் உபகரணங்களுக்காக $80 மில்லியன் முதலீடு செய்து, மணிக் கணக்கு அடிப்படையில் வேலை செய்வதற்கான 140 வேலைவாய்ப்புக்கள் மற்றும் சம்பள அடிப்படையில் வேலை செய்வதற்கான 54 வேலைவாய்ப்புக்களைச் சேர்த்தது.

ப்ராம்ப்ட்டனின் உணவு மற்றும் பானங்கள் துறையைப் பற்றி மேலும் அறிய, பார்வையிடவும் www.investbrampton.ca.

**அறிஞர் கூற்றுக்கள்**

“பிசினஸ் ஃபெசிலிட்டிஸ் இதழில் (Business Facilities Magazine) இருந்து **தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக** உணவுப் பதப்படுத்தும் துறைக்கான தரவரிசையில் முதல் இடத்தைப் பெற்று முன்னணியாளராக இருப்பதில் ப்ராம்ப்ட்டன் நகரம் பெருமிதம் கொள்கிறது. நமது உணவு மற்றும் பானங்கள் பதப்படுத்தல் வகை வணிகங்கள் செய்துவரும் சிறந்த பணிக்கும், அவர்களுக்கு ஆதரவளிக்கும் எங்கள் பொருளாதார மேம்பாட்டுக் குழுவிற்கும் இந்த தரவரிசை ஒரு சான்றாகும். அதன் தொழில்துறையில் முன்னணி தொழில்நுட்பம், உயர்தர தயாரிப்புகள் மற்றும் வளமான விவசாய பாரம்பரியம் ஆகியவற்றுடன், ப்ராம்ப்ட்டன் உண்மையில் உணவு மற்றும் பானங்கள் துறையில் ஒரு தொழில்துறை முன்னணியாளராக உள்ளது.”

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"வணிக வசதிகள் இதழின் வருடாந்திர மெட்ரோ நகர தரவரிசை அறிக்கையில் உணவு பதப்படுத்தும் முன்னணியாளர்கள் பிரிவில் #1 ஆக தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக அங்கீகரிக்கப்பட்டதானது, எங்கள் அர்ப்பணிப்புள்ள பொருளாதார மேம்பாட்டுக் குழு மற்றும் அனைத்து தொழில் வணிகங்கள் மற்றும் அவர்களின் பணியாளர்களுக்கு ஒரு சான்றாகும். வணிகத்தை தக்கவைத்தல் மற்றும் விரிவாக்கத்தில் கவனம் செலுத்தி, புதிய வணிகங்களை ப்ராம்ப்ட்டனுக்குக் கொண்டு வருவதற்கு நகரம்

அயாராது உழைக்கிறது; அதே நேரத்தில் உணவு மற்றும் குளிர்பானத் துறையில் எங்களின் அற்புதமான வணிகங்களுக்கு ஆதரவும் அளிக்கிறது."

*- மார்ட்டின் மெடெய்ரோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 3 & 4; தலைவர், பொருளாதார மேம்பாடு, ப்ராம்ப்ட்டன் நகரம்*

"ப்ராம்ப்ட்டன் நகரத்தில் உள்ள எங்கள் குழு, - நமது சமூகத்தின் முதுகெலும்பாக இருக்கின்ற - நமது வணிகச் சமூகத்தை எங்களால் முடிந்த எல்லா வகையிலும் ஆதரிப்பதற்காக அர்ப்பணிப்பு கொண்டுள்ளது. நமது உணவு மற்றும் குளிர்பானத் துறையின் முயற்சிகள் - மற்றும் நமது அர்ப்பணிப்புள்ள பொருளாதார மேம்பாட்டுக் குழுவிற்கு – பிஸினஸ் ஃபசிலிட்டீஸ் (Business Facilities Magazine) இதழ் தரவரிசைப்படி, தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக #1 இடமாக அங்கீகரிக்கப்பட்டதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம்."

*- பால் மோர்ரிஸன், இடைக்கால தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
ப்ராம்ப்ட்டன் நகர பன்முக கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca